**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை,**

**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.112/2013 நாள்: 13.08.2019

இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வாதி தரப்பில் வா.சா.1 சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர், நீதிமன்றத்தில் திரு.மாதையன் பென்ஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | |
|---|---|
| பெயர் | : சாந்தி |
| கணவர் பெயர் | : செல்வம் |
| கிராமம் : | தாலுக்கா : |
| வயது : | வேலை : |

**1, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னை கேட்காமல் எனது சொத்தை விற்றுவிட்டார்கள் அதனால் நான் சொத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் சுமார் 30 வருடத்திற்கு முன்பு திருமணமானது. எனக்கு எந்த ஊரில் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் கே.எட்டிப்பட்டி கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்தார்கள். நான் திருமணத்திற்கு பிறகு எத்தனை வருடங்களாக எட்டிப்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் சுமார் 25 வருடங்களாக குடியிருந்து வருகிறேன், கடந்த 7 வருடமாக நான் கல்லூரில் குடியிருந்து வருகிறேன். வழக்கு சொத்து பூர்வீகமாக யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், அது எங்கள் தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது, அதில் எனக்கும் பங்கு உண்டு. நான் தற்போது எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் கல்லூரில் வீடு வாங்கி குடியிருந்து வருகிறேன். நான் கல்லூரில் எனது தந்தையின் பராமரிப்பில் இருந்து வருகிறேன் என்ற சொன்னால் சரியல்ல, நான் எனது தாயாருடன் தனியாக வசித்து வருகிறேன் எனது தந்தை எனது சகோதரர்களுடன் வசித்து வருகிறார். எனக்கு வழக்கு சொத்தின் சர்வே எண் விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நான் இந்த வழக்கை பொய்யாக காரணங்களுக்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் சரியான ஆதாரத்துடன்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கில் சொல்லியிருக்கும் சொத்து விவரம் பொய்யானது என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. நான் இந்த

வழக்கில் சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

**4-ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**